FAILURE TO PAY THE CALL MONEY BY 20TH JANUARY 2024 SHALL LEAD TO FORFEITURE OF PARTLY PAID-UP EQUITY SHARES

In terms of provisions of the Companies Act, 2013 ('**Act**'), read with the relevant rules made thereunder, the First and Final Call Notice had been issued to such persons who were members of the Company on 2nd March 2023, being the Record Date. The call payment period has since expired on 23rd March 2023.

In this connection, the Securities Issue Committee of the Board of Directors of the Company (the "Committee"), duly authorised by the Board of Directors of the Company, at its meeting held on 29th March 2023, approved sending Reminder-cum-Forfeiture Notice from time to time for payment of the First and Final Call amount of ₹2.50 per partly paid-up equity share (comprising ₹1.00 towards face value and ₹1.50 towards securities premium), to the holders of such partly paid-up equity shares on which the First and Final Call Money remains unpaid.

Accordingly, the Company has sent the Final Reminder-cum-Forfeiture Notice to the shareholders who have not paid the call money.

The payment of the First and Final Call has to be made immediately but not later than 20th January 2024 using any of the following modes:

a. **For payment by net-banking / UPI through the R-WAP facility provided by KFin** – Visit weblink https://rights.kfintech.com/callmoney/ and proceed to make payment. Kindly note that the interest amount is pre-computed when you make payment through the R-WAP.

b. **For payment through DD, the details are as under:**
   i. DD to be drawn in favour of: SUZLON ENERGY LIMITED - RIGHT ALLOTMENT ACCOUNT
   ii. DD payable at : Hyderabad or at par
   iii. DD to be accompanied by Payment Slip containing details such as Name, DPID-Client ID, No. of shares, Amount, DD date and Number, Name of Bank
   iv. DD along with the payment slip to be sent to: **KFin Technologies Limited, (Unit: Suzlon Energy Limited), Selenium Tower B, Plot No.31 and 32, Financial District, Nanakramguda, Rangareddi-500032, Telangana, India.**

The payment slip and detailed instructions for payment of Call Money are available on the website of the Company at www.suzlon.com and / or on web link of Kfin Technologies Limited at https://rights.kfintech.com/callmoney/. Please read the same carefully before proceeding for payment.

Please note that, last date of payment is 20th January 2024. Failure to pay the First and Final Call Money, as aforesaid, shall render the partly paid-up equity shares of the Company, including the amount already paid thereon, liable to be forfeited in accordance with the provisions of the Act, the Articles of Association of the Company and the Letter of Offer. Further, interest @ 8.00 % (Eight per cent only) p.a. will continue to be charged for delay in payment of the First and Final Call from 24th March 2023 till date of the actual payment of the First and Final Call. The Company shall be entitled to deduct from any dividend payable to such members, if any, all sums of money outstanding on account of calls and interest due thereon in relation to the partly paid-up equity shares of the Company.

All correspondence in this regard may be addressed to: KFin Technologies Limited, Unit: Suzlon Energy Limited, Selenium Tower B, Plot No.31 and 32, Financial District, Nanakramguda, Rangareddi-500032, Telangana, India; Contact person: Mr. M. Murali Krishna Tel: +91 40 6716 2222; Toll Free No. 1800 309 4001 (operational from Monday to Saturday between 9 a.m. and 5 p.m.) E-mail id: einward.ris@kfintech.com.

Dated: 11th January 2024
Place: Pune

For Suzlon Energy Limited
Sd/-
Geetanjali S.Vaidya,
Company Secretary.

மழை வெள்ள நிவாரணம் கேட்பதற்கு

தமிழக எம்.பி.க்கள் குழு அமித்ஷாவை சந்திக்கிறார்கள்

டி.ஆர்.பாலு-வைகோ உள்பட 8 பேர் செல்கிறார்கள்

சென்னை, ஜன.12—
மிக்ஜம் புயல் காரணமாக கடந்த 3 மற்றும் 4 தேதிகளில் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பலத்த மழை பெய்தது. இதில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகள் வெள்ளத்தில் தத்தளித்தது.

இதில் பொதுமக்களின் உடைமைகளுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழக அரசு ரூ.6 ஆயிரம் நிவாரணத்தொகையை அறிவித்து வழங்கியது.

இந்த நிலையில் அதே டிசம்பர் 17 மற்றும் 18 தேதிகளில் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் வரலாறு காணாத மழை பெய்ததால் 2 மாவட்டங்களிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

இரண்டு மாவட்டங்களிலும் பெரும் சேதம் ஏற்பட்டது. இதனால் அதிக பாதிப்புக்கு உள்ளான இடங்களுக்கு ரூ.6 ஆயிரம், குறைந்த பாதிப்புக்கு உள்ளான இடங்களுக்கு ரூ.1000 நிவாரண தொகையை தமிழக அரசு வழங்கியது.

அந்த சமயத்தில் முதல்—அமைச்சர் மு.க.ஸ்டாலின் டெல்லியில் பிரதமர் மோடியை நேரில் சந்தித்து தமிழக மழை வெள்ள பாதிப்பு பற்றி எடுத்துக்கூறினார்.

தமிழகத்தில் ஒரே மாதத்தில் ஏற்பட்ட இயற்கை பேரிடர்களுக்கு மத்திய அரசிடம் இருந்து நிவாரணத்தொகையாக ரூ.37,907.19 கோடி வழங்குமாறு தமிழக அரசு கோரிக்கை வைத்தது.

ஆனால் இதுவரை மத்திய அரசு வெள்ள பாதிப்புக்கு ஏற்றபடி நிவாரண தொகையை இன்னும் ஒதுக்கவில்லை.

இதனால் தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தமிழக அரசு கோரிய வெள்ள நிவாரணத் தொகையை வழங்க வலியுறுத்துவதற்காக உள்துறை மந்திரி அமித்ஷாவை சந்திக்க தமிழக அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் குழு முடிவு செய்தது.

அமித்ஷாவை நேரில் சந்திக்க நேரம் ஒதுக்கி தருமாறும் குழு கேட்டுக் கொண்டனர்.

அதன்படி டெல்லியில் தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையிலான அனைத்துக் கட்சி எம்.பி.க்களின் குழுவை சந்திக்க உள்துறை மந்திரி அமித்ஷா நாளை (சனிக்கிழமை) பிற்பகல் 3.30 மணிக்கு நேரம் ஒதுக்கி கொடுத்து உள்ளார். அமித்ஷாவின் இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற உள்ளது.

அமித்ஷாவை சந்திக்கும் குழுவில் டி.ஆர்.பாலு (தி.மு.க.), ஜெயக்குமார் (காங்கிரஸ்), வைகோ (ம.தி.மு.க.), சுப்பராயன் (இந்திய கம்யூனிஸ்டு), பி.ஆர்.நடராஜன் (இந்திய மார்க்சிஸ்ட்), ரவிக்குமார் (வி.சி.க.), நவாஸ்கனி (முஸ்லிம் லீக்), சின்ராஜ் (கொங்குநாடு மக்கள் கட்சி) ஆகிய 8 பேர் அமித்ஷாவை சந்திக்க செல்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து டி.ஆர்.பாலு எம்.பி. கூறுகையில், 'வெள்ள நிவாரணம் தொடர்பாக போதுமான நிதி வழங்க வலியுறுத்தி முதல்—அமைச்சர் மத்திய அரசிடம் வேண்டுகோள் வைத்திருந்தார். அதை வலியுறுத்துவதற்காக உள்துறை மந்திரி அமித்ஷாவை நாளை அவரது வீட்டில் சந்திக்க உள்ளோம் என்றார்.

மேல்மருவத்தூர் கோவிலில் இருமுடி செலுத்திய பக்தர்கள்



மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் தைப்பூச ஜோதி விழாவை முன்னிட்டு லட்சக்கணக்கான பக்தர்கள் இருமுடி செலுத்தி வருகிறார்கள். இதற்காக கோவிலில் குவிந்த பக்தர்களை படத்தில் காணலாம்.

சென்னை தரமணியில் பரபரப்பு சம்பவம்

கல்லூரி மாணவியின் ஆபாச போட்டோ-வீடியோக்களை வெளியிட போவதாக மிரட்டல்

தன்னை கைவிட்டுவிட்டு வேறு ஒருவரை காதலித்ததால் வாலிபர் ஆத்திரம்

சென்னை, ஜன.12—
சென்னை தரமணி பகுதியை சேர்ந்த கல்லூரி மாணவி ஒருவரின் நிர்வாண போட்டோக்கள் மற்றும் ஆபாச வீடியோக்களை இணைய தளத்தில் வெளியிட்டு விடுவேன் என்று அவரது முன்னாள் காதலன் மிரட்டல் விடுத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வீடியோ

19 வயதான கல்லூரி மாணவி அதே பகுதியில் உள்ள கல்லூரியில் படித்த போது வாலிபர் ஒருவருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. இருவரும் ஒன்றாக பல இடங்களுக்கு வெளியில் சென்றுள்ளனர். அப்போது இருவரும் ஒன்றாக இருப்பது போன்ற வீடியோக்களை தனது செல்போனில் வாலிபர் பதிவு செய்து உள்ளார். இந்த வீடியோக்களில் மாணவியின் ஆபாச வீடியோக்களும் இருந்துள்ளன.

மாணவி தற்போது வெளியூரில் பல்கலைக்கழகம் ஒன்றில் தங்கி இருந்து படித்து வருகிறார். அங்கு படிக்கும் மாணவர் ஒருவருடன் அவருக்கு காதல் ஏற்பட்டு உள்ளது. இதனால் தனது பழைய காதலை துண்டித்து உள்ளார். காதலனுடன் பேசுவதை அவர் நிறுத்தி உள்ளார்.

நிர்வாண போட்டோக்கள்

இதனால் ஆத்திரம் அடைந்த கோட்டூர்புரம் வாலிபர், மாணவியை தொடர்பு கொண்டு பேச முயற்சித்தும் அதற்கு பலன் கிடைக்கவில்லை. கடுமையான போராட்டத்துக்கு பிறகு மாணவியின் செல்போனில் பேசிய காதலன் அவரை மிரட்டியுள்ளார்.

என்னை விட்டு விட்டு வேறு ஒருவரை காதலிக்கிறாயா? உன்னை சும்மா விடமாட்டேன் என்று கூறிய வாலிபர் நாம் இருவரும் ஒன்றாக இருக்கும் வீடியோக்களை இணைய தளத்தில் வெளியிடப் போகிறேன். மேலும் நீ நிர்வாணமாக இருப்பது போன்று செல்போனில் படம் எடுத்து புதிதாக போட்டோக்களை அனுப்ப வேண்டும். இல்லை என்றால் நடப்பதே வேறு என்று எச்சரித்துள்ளார்.

இதனால் பயந்து போன மாணவி செல்போனில் நிர்வாணமாக இருப்பது போன்று 'செல்பி' போட்டோக்களை எடுத்து உள்ளார். பின்னர் தனது பழைய காதலனின் செல்போன் எண்ணுக்கு அதனை அனுப்பி வைத்தார். இதன் பிறகு பதட்டம் அடைந்த மாணவி ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் பிரச்சினைகள் பற்றி பெற்றோரிடம் தெரிவித்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த அவர்கள் இது பற்றி கோட்டூர்புரம் போலீசில் புகார் அளித்தனர். போலீசார் புகாரை பெற்றுக்கொண்டு விசாரணை நடத்தினர்.

மாணவியின் ஆபாச வீடியோக்கள் மற்றும் போட்டோக்களை வெளியிட்டு விடுவேன் என்று மிரட்டல் விடுத்த வாலிபரை பிடித்து விசாரணை நடத்தினர். அவரது செல்போனை வாங்கி பார்த்தனர். அதில் மாணவியின் 4 நிர்வாண போட்டோக்கள் மற்றும் ஆபாச வீடியோக்கள் இருந்தன. அதனை போலீசார் அழித்தனர்.

மாணவன் பயன்படுத்திய செல்போன் விலை உயர்ந்த செல்போன் என்பதால் போட்டோக்கள் மற்றும் வீடியோக்கள் பதிவாகும் கேலரி பகுதியை தாண்டி வேறு எங்காவது செல்போனில் பதிவாகி உள்ளதா என்பது பற்றியும் ஆய்வு செய்து போட்டோக்கள், வீடியோக்கள் இல்லை என்பதை உறுதி செய்தனர். பின்னர் வாலிபரை கடுமையாக எச்சரித்து போலீசார் அனுப்பி வைத்தனர்.

இது தொடர்பாக கோட்டூர்புரம் போலீசார் கூறும் போது வாலிபர் மீது வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்று தெரிவித்தனர்.

சென்னை பள்ளிகளில் நடந்த ஆய்வில் அதிர்ச்சி தகவல்

40 சதவீத மாணவர்கள் வயதுக்கு மிஞ்சிய கூடுதல் எடையுடன் உடல் பருமனாக உள்ளார்கள்

துரித உணவு பழக்கமே குண்டாவதற்கு காரணம்

சென்னை, ஜன.12—
சென்னை நகரில் உள்ள பள்ளி மாணவர்களில் 5 பேரில் ஒருவர் உடல் பருமனாகவும், அதிக எடை கொண்டவர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதாகவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

வயதுக்கு மிஞ்சிய உடல் பருமன்

தனியார் குழந்தைகள் மருத்துவமனை மற்றும் சிறப்பு மருத்துவமனை ஆகியவை பள்ளி மாணவ—மாணவிகளின் உடல் எடை குறித்து ஆய்வு நடத்தியது. 5 வயது முதல் 17 வயது வரை உள்ள 1,124 மாணவ—மாணவிகளிடம் உடல் எடை மற்றும் உயரம் கணக்கிடும் பி.எம்.ஐ. பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் 584 பேர் மாணவிகள் ஆவார்கள்.

இந்த ஆய்வில் 40 சதவீத மாணவ—மாணவிகள் வயதுக்கு மிஞ்சிய கூடுதல் எடையுடன் உடல் பருமனாக இருப்பது தெரிய வந்துள்ளது. 667 பேருக்கு (59.43 சதவீதம்) உடல் எடை இயல்பாக இருக்கிறது. 237 பேர் (21.08 சதவீதம்) அதிக எடையிலும், 220 பேர் (19.5 சதவீதம்) உடல் பருமனாகவும் உள்ளனர்.

துரித உணவு

அதிக எடை அல்லது உடல் பருமன் பாதிப்பு இந்தியாவில் உள்ள பல பள்ளி ஆய்வுகளில் காணப்பட்டதைவிட இது அதிகமாக உள்ளது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

துரித உணவு பழக்கமே (பாஸ்ட்புட்) உடல் குண்டாவதற்கு காரணம் என்று டாக்டர்கள் கூறுகிறார்கள். இதுகுறித்து டாக்டர் ஒருவர் கூறும்போது, "உட்கார்ந்தே இருக்கும் வாழ்க்கை முறை, துரித உணவுகளை அதிகப்படியாக பயன்படுத்துவது, செல்போன் உள்ளிட்ட மின்னணு பொருட்களை அதிகமாக பயன்படுத்துவது, வீடுகளில் இருந்து வாகனங்களிலேயே பள்ளிக்கு செல்வது உள்ளிட்ட காரணங்கள் பள்ளி மாணவ—மாணவிகளின் உடல் எடை அதிகரிப்புக்கு வழிவகுத்தது" என்றார்.

தென் இந்திய பகுதிகளில் இருந்து

வடகிழக்கு பருவ மழை 15-ந்தேதி விலகுகிறது

சென்னை வானிலை மையம் தகவல்

சென்னை, ஜன. 12—
தமிழகத்தில் வட கிழக்கு பருவ மழை கடந்த அக்டோபர் மாதம் 22—ந்தேதி தொடங்கியது.

வடகிழக்கு பருவமழை

தமிழகத்திற்கு அதிக மழைப்பொழிவை கொடுப்பது வடகிழக்கு பருவ மழை தான். ஆறு, ஏரி, குளங்கள், கால்வாய்கள் அனைத்தும் பெரும்பாலும் பருவமழை காலத்தில் நிரம்பி விடும்.

வடகிழக்கு பருவ மழை காலம் அக்டோபர் தொடங்கி ஜனவரி முதல் வாரம் வரையாகும். இந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் குறைவான மழையும், நவம்பர் மாதத்தில் ஒரு சில மாவட்டங்களில் இயல்பை விட அதிகமாகவும் பெய்தது.

ஆனாலும் சராசரி மழை அளவிற்கு பெய்யவில்லை. டிசம்பர் மாதத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் மழை பெய்ததால் பற்றாக்குறைவாக இருந்த மழை அளவு மிகுதியாக மாறியது.

டிசம்பர் மாத நடுவில் தென் மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களில் கன மழை இயல்பை விட அதிகமாக பெய்து உபரியாக பதிவானது.

டிசம்பர் மாத இறுதியிலும் சென்னை, தென் மாவட்டங்களில் பலத்த மழை பெய்து எதிர் பாராத மழைப்பொழிவை கொடுத்தது. இதனால் தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை காலத்தில் பெய்ய வேண்டிய சராசரியான 48 செ.மீ. மழையை விட அதிகமாக பெய்தது.

மேலும் ஜனவரி முதல் வாரத்திலும் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கன மழை பெய்தது. ஜனவரியில் பொதுவாக மழை குறைந்து விடும். ஆனால் இந்த ஆண்டு தொடக்கத்திலேயே சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட வட மாவட்டங்கள் மற்றும் தென் மாவட்ட பகுதியிலும் நல்ல மழையை கொடுத்தது.

வறண்ட வானிலை

பருவ மழை காலத்தில் மிக்ஜம் புயல் ஒன்று மட்டுமே உருவாகியது குறிப்பிடத்தக்கது. ஆனால் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மற்றும் தொடர்ந்து நிலவிய வளி மண்டல கீழடுக்கு சுழற்சியால் நல்ல மழை பொழிவு கிடைத்தது.

இந்த நிலையில் தமிழகத்தில் பருவ மழை கடந்த சில நாட்களாக குறைந்தது. குளிர், பனி அதிகரித்து வருகிறது. நாளை முதல் 17—ந்தேதி வரை வறண்ட வானிலை நிலவும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தமிழகம் உள்ளிட்ட தென் இந்திய பகுதிகளில் இருந்து வடகிழக்கு பருவ மழை வருகிற 15—ந்தேதி விலக வாய்ப்பு இருப்பதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

தங்கம் விலை மீண்டும் உயர்வு பவுனுக்கு ரூ.80 அதிகரிப்பு

சென்னை, ஜன.12—
கடந்த சில நாட்களாக குறைந்து வந்த தங்கத்தின் விலை இன்று மீண்டும் உயர்ந்துள்ளது. இன்று கிராம் 10 ரூபாய் அதிகரித்து ரூ.5,820—க்கும், பவுன் 80 ரூபாய் உயர்ந்து ரூ.46,560—க்கும் விற்பனை ஆகிறது.

வெள்ளி விலையில் 2 நாட்களாக மாற்றம் இல்லை. கிராம் ரூ.77.50—க்கும், கிலோ ரூ.77,500—க்கும் விற்பனை ஆகிறது.

தெலுங்கானாவில்

பஸ்சில் விட்டு சென்ற சண்டைக்கோழி ஏலம்

விளம்பரம் செய்தும் உரிமையாளர் வரவில்லை

திருப்பதி, ஜன.12—
தெலுங்கானா மாநிலம் வாரங்கல்லில் இருந்து வெமுலவாடா பஸ் நிலையத்திற்கு அரசு பஸ் வந்தது.

சண்டை சேவல்

பயணிகள் அனைவரும் பஸ்சில் இருந்து இறங்கியதும் டிரைவர் மற்றும் கண்டக்டர் உணவு சாப்பிடுவதற்காக சென்றனர்.

அப்போது பஸ்சில் இருந்து கோழி கூவும் சத்தம் கேட்டது. இதையடுத்து டிரைவர், கண்டக்டர் இருவரும் பஸ்சில் ஏறி பார்த்தனர். பயணிகளின் சீட்டுக்கு அடியில் ஒரு பை இருந்தது. பையை திறந்து பார்த்தபோது அதில் சண்டை சேவல் இருந்தது. பயணிகள் அதனை மறந்து விட்டு சென்றுள்ளனர்.

இது குறித்து பஸ் மேலாளர் மல்லையாவுக்கு தகவல் தெரிவித்தனர். பின்னர் சண்டை சேவலை கரீம் நகர் பணிமனைக்கு கொண்டு சென்றனர். இரும்பு கூண்டில் அடைத்து சேவலுக்கு உணவு வழங்கினார்.

பஸ்சில் சண்டை சேவலை விட்டுச் சென்றவர் வந்து சேவலை மீட்டு செல்லலாம் என விளம்பரம் செய்தனர்.

ஆனால் 3 நாட்களாக சேவலுக்கு சொந்தம் கொண்டாடி யாரும் வரவில்லை.

இன்று மாலை ஏலம்

இதனால் சண்டை சேவலை இன்று மாலை ஏலம் விட அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

தெலுங்கானாவில் பந்தய சேவலுக்கு ஏகப்பட்ட வரவேற்பு உள்ளதால் ஏராளமானோர் கலந்து கொண்டு சண்டை சேவலை ஏலம் எடுப்பார்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தூய்மையான இந்திய நகரங்களில் சென்னைக்கு 199-வது இடம்

முதல் 100 நகரங்களில் தமிழகத்தில் ஒரு நகரமும் இல்லை

சென்னை, ஜன.12—
இந்தியாவில் மிக தூய்மையான நகரங்களை தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் மத்திய அரசு விருதுகளை வழங்கி வருகிறது. இந்த விருதுக்கு 'ஸ்வச் சர்வேக்ஷன்' விருது என்று பெயர். இதற்காக மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ஒவ்வொரு ஆண்டும் ஸ்வச் பாரத் திட்டத்தின் கீழ் தூய்மையான நகரங்கள் பட்டியலை வெளியிட்டு வருகிறது.

இந்தியா முழுக்க உள்ள 446 நகரங்களை பல்வேறு தரநிலைகளில் ஆய்வு செய்து இந்த ஸ்வச் சர்வேக்ஷன் 2023 பட்டியலை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. இதில் நாட்டிலேயே தூய்மையான நகரமாக இந்தூர் தேர்வு செய்யப்பட்டுள்ளது. கடந்த 7 ஆண்டுகளாக இந்தூர் தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளது. சூரத் 2—வது இடத்தில் உள்ளது. நவி மும்பை 3—வது இடத்திலும், புதுடெல்லி 7—வது இடத்திலும், ஐதராபாத் 9—வது இடத்திலும், அகமதாபாத் 15—வது இடத்திலும், லக்னோ 44—வது இடத்திலும், பெங்களூர் 125—வது இடத்திலும், மும்பை 189—வது இடத்திலும் உள்ளது. கொல்கத்தா 438—வது இடத்தில் உள்ளது.

அதேபோல சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்கள் பிரிவில், மராட்டியம் முதல் இடத்தை பிடித்தது. மத்திய பிரதேசம் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களை பிடித்தன. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு பரிசுகளை வழங்கினார்.

446 நகரங்களை கொண்ட இந்த பட்டியலில் முதல் 100 இடங்களில் தமிழகத்தை சேர்ந்த எந்தவொரு நகரமும் வரவில்லை. திருச்சி இந்த பட்டியலில் 112—வது இடத்தை பிடித்துள்ளது. ஒரு லட்சத்திற்கு மேல் மக்கள்தொகையை கொண்ட நகரங்கள் பிரிவில் திருச்சி 112—வது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு திருச்சி 262—வது இடத்தில் இருந்த நிலையில், இந்த ஆண்டு 112—வது இடத்திற்கு முன்னேறியுள்ளது. இந்த பட்டியலில் திருச்சி 9,500 புள்ளிகளுக்கு 5,794.9 புள்ளிகள் பெற்றுள்ளது. இதன் மூலம் தமிழகத்தின் தூய்மையான நகராக திருச்சி தேர்வாகியுள்ளது. தூத்துக்குடி 2—வது இடத்திலும், கோவை 3—வது இடத்திலும் உள்ளன. சென்னை 5—வது இடத்தில் உள்ளது. தேசிய தரவரிசையில் தூத்துக்குடி 179—வது இடத்தையும், கோவை 182—வது இடத்தையும், சென்னை 199—வது இடத்தை பிடித்துள்ளது.

கடந்த 3 ஆண்டுகளாக சென்னை நகரம் 40—க்கும் மேற்பட்ட இடங்களையே பிடித்திருந்தது. அதாவது கடந்த 2020—ம் ஆண்டு 45—வது இடத்திலும், 2021—ம் ஆண்டு 43—வது இடத்திலும், 2022—ம் ஆண்டு 44—வது இடத்திலும் சென்னை இருந்தது. தற்போது 199—வது இடத்துக்கு தள்ளப்பட்டு உள்ளது. சென்னைக்கு 9,500 புள்ளிகளுக்கு 4313 புள்ளிகள் கிடைத்துள்ளது.

தூய்மை, குப்பை சேகரிப்பு, சுகாதாரம், கழிவுநீர் அமைப்பு, மாசுபாடு உள்ளிட்டவைகளை கையாளுவதன் அடிப்படையில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. சென்னை நகரத்தில் குவிந்த குப்பைகளில் 12 சதவீதம் மட்டுமே மறுசுழற்சி செய்யப்பட்டுள்ளது. மேலும் பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கிடங்குகளில் 21 சதவீதம் குப்பைகள் மட்டுமே பயோமெட்ரிக் முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. சென்னையில் ஒரு நாளைக்கு 6500 டன் குப்பைகள் சேருகின்றன. பொது கழிப்பறைகளில் 77 சதவீதம் தூய்மையாக பராமரிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் 95 சதவீதம் அளவுக்கு வீட்டுக்கு வீடு குப்பை சேகரிக்கப்பட்டுள்ளது. மார்க்கெட் பகுதிகள் 90 சதவீதம், குடியிருப்பு பகுதிகள் 91 சதவீதம் அளவுக்கு தூய்மையாக பராமரிக்கப்பட்டு உள்ளது. நீர் நிலைகள் 85 சதவீதம் தூய்மையாக உள்ளன. இது குறித்து சென்னை மாநகராட்சி அதிகாரி ஒருவர் கூறுகையில், 'பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கிடங்குகளில் உயிரி உரம் தயாரிப்பதில் நீண்ட கால திட்டங்கள் நிறைய உள்ளன. அந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டவுடன் சென்னையின் தரம் மேம்படும். எந்த ஒரு அடிப்படை வசதிகளும் செய்யாமல் கடந்த 2011—ம் ஆண்டு சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டது. அந்த பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை, கழிவு நீர் கால்வாய் அமைப்பதில் சிக்கல்கள் உள்ளன' என்றார்.

படிவம் எண்.NCLT 3A

மனுகுறித்து விவரிக்கும் விளம்பரம்
(தேசிய நிறுவன சட்டத்தீர்ப்பாயம் 2016-ன் விதி 35-க்கு இணங்க)
சென்னையில் உள்ள தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் அமர்வு-1 முன்பாக
CP(CAA)/57(CHE)/2023 & CA(CAA)/77(CHE)/2023
நிறுவனங்கள் சட்டம் 2013 தொடர்பாகவும்
மற்றும்
நிறுவனங்கள் (சமரசங்கள், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைத்தல்கள்) விதிகள் 2016 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய நிறுவனங்கள் சட்டம் 2013-ன் பிரிவு 230 & 232 தொடர்பாகவும்
மற்றும்
ஸ்வெலக்ட் சோலார் எனர்ஜி பிரைவேட் லிமிடெட்
மனுதாரர் நிறுவனம் / மாற்றல் செய்யும் நிறுவனம் எண்.1
மற்றும்
கே ஜே சோலார் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட்
மனுதாரர் நிறுவனம் / மாற்றல் செய்யும் நிறுவனம் எண்.2
இந்த இரண்டு நிறுவனங்களையும்
ஸ்வெலக்ட் எனர்ஜி சிஸ்டம்ஸ் லிமிடெட், மாறுதலுக்குரிய நிறுவனம் மற்றும் அதை சார்ந்த பங்குதாரர்களை உடன் ஒன்றிணைத்தல் திட்டம் தொடர்பாக

மனுவிசாரணைக்கு வருதல் பற்றிய அறிவிப்பு

இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால் நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவுகள் 230 முதல் 232 வரையிலான பிரிவுகளின் கீழ் ஸ்வெலக்ட் சோலார் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் (மாற்றல் செய்யும் நிறுவனம் 1) மற்றும் கே ஜே சோலார் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் (மாற்றல் செய்யும் நிறுவனம் 2) இரண்டையும் ஸ்வெலக்ட் எனர்ஜி சிஸ்டம்ஸ் லிமிடெட் (மாறுதலுக்குரிய நிறுவனம்) உடனும் அது சார்ந்த பங்குதாரர்கள் உடனும் ஒன்றிணைத்தல் திட்டம் பற்றிய ஒரு மனுவை மனுதாரர் நிறுவனங்கள் அக்டோபர் 6, 2022 தேதியன்று தாக்கல் செய்தன. அந்த குறிப்பிட்ட மனுவை தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் சென்னை அமர்வு (NCLT) டிசம்பர் 20, 2023 அன்று அனுமதித்தது. குறிப்பிட்ட மனுவானது, பிப்ரவரி 08, 2024 தேதியன்று தேசிய சட்டத்தீர்ப்பாயத்தின் (NCLT) முன்பாக இறுதி விசாரணைக்கு எடுத்து கொள்ள நிச்சயிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட மனுவை ஆதரிக்க அல்லது எதிர்க்க விரும்பும் நபர்கள், தங்களுடைய அறிவிப்பின் நோக்கத்தை எழுத்துப்பூர்வமாக மனுதாரர் நிறுவனங்களுக்கு, தாங்களாகவோ கையொப்பமிட்டு அல்லது தங்கள் வழக்கறிஞரோ கையொப்பமிட்டு தங்கள் பெயர்/முகவரி ஆகிய விவரங்களுடன் விசாரணைக்கு (08.02.2024) வருகிற தேதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக - ஸ்வெலக்ட் ஹவுஸ், 5 சர் பி.எஸ். சிவசாமி சாலை, மைலாப்பூர், சென்னை - 600 004-ல் அமைந்துள்ள மனுதாரர் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு வந்து சேருமாறு அனுப்பிவைக்க வேண்டும். அப்படிப்பட்டவர் மனுவை எதிர்க்கும் பட்சத்தில் எதிர்ப்பதற்கான முகாந்திரங்களை தெரிவிக்க வேண்டும் அல்லது தம்முடைய பிரமாண பத்திரத்தின் நகலை அப்படிப்பட்ட தங்கள் அறிவிப்புடன் இணைக்க வேண்டும். மனுவின் நகலைப் பெற விரும்பும் எந்த ஒரு நபரும் கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரியிடமிருந்து அதற்குரிய பரிந்துரைக்கப்பட்ட கட்டணத்தை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

அ பாலன்
இயக்குநர்
DIN 00017091

இடம்: சென்னை
தேதி : 09.01.2024
விலாசம் : ஸ்வெலக்ட் ஹவுஸ், எண்.5, சர் பி.எஸ். சிவசாமி சாலை, மைலாப்பூர், சென்னை 600 004.

தமிழ்நாடு வனத்துறை
ஆனைமலை புலிகள் காப்பகம், பொள்ளாச்சி வனக்கோட்டம்
இணையவழி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். ந.க.எண். 4744 / 2023 / வ, நாள்: 10.01.2023

[illegible] http://www.tenders.tn.gov.in [illegible] 27.01.2024 [illegible] 29.01.2024 [illegible]

வ. எண்	வேலையின் பெயர்	மதிப்பீட்டு தொகை	உ.வைப்பு தொகை	ஒப்பந்தப்புள்ளி விதம்	வேலை முடிக்கப்பட வேண்டிய காலம்
1	[illegible]	ரூ. 5,40,50,000/-	ரூ. 5,40,500/-	இணையவழி	150 நாட்கள்

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணம் [illegible] http://www.tenders.tn.gov.in [illegible]
2. [illegible] 12.01.2024 [illegible] 09.00 [illegible] 19.01.2024 [illegible] 10.00 [illegible] 27.01.2024 [illegible] 02.30 [illegible] 29.01.2024 [illegible] 03.30 [illegible] 30.01.2024 [illegible] 03.30 [illegible]

[illegible] http://www.tenders.tn.gov.in [illegible] 04259 - 235085

செ.ம.தொ.இ / 2023 / ஒப்பந்தப்புள்ளி / 2024

திரு. [illegible], ஆனைமலை புலிகள் காப்பகம், பொள்ளாச்சி

தமிழ்நாடு வனத்துறை
[illegible]
இணையவழி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

[illegible] https://tntenders.tn.gov.in [illegible]

வ. எண்	வேலையின் பெயர்	மதிப்பீட்டு தொகை	உ.வைப்பு தொகை	சொத்து மதிப்பு லட்சத்தில்	வேலை முடிக்கப்பட வேண்டிய காலம்
1	[illegible]	ரூ.30127[illegible]	ரூ.30000.00/-	170.00	180 நாட்கள்

[illegible] https://tntenders.gov.in [illegible] http://www.tenders.tn.gov.in [illegible] 0423-2444096

செ.ம.தொ.இ/[illegible]/2024

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில் திருப்பணி
ஒப்பந்த வகை: ஒட்டு மொத்தம் /இணையவழி
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 1/2024/ நாள் / 08.01.2024

[illegible]

வ. எண்	பணியின் பெயர்	ஒப்பந்த தொகை	முன் வைப்புத் தொகை	பணிக் காலம்	ஒப்பந்ததாரர் தகுதி	முன்வைப்புத்தொகை யாருக்கு செலுத்த வேண்டும்
1	[illegible]	ரூ.81.14 இலட்சம்	ரூ. 90,500/-	10 மாதம்	[illegible]	[illegible]

[illegible]

தக்கார்/செயல் அலுவலர்.

DIPR/184/TENDER/2024

திருப்பெரும்புதூர் பேரூராட்சி
காஞ்சிபுரம் மாவட்டம்
ந.க.எண்.431/2009/அ1
ஒப்பந்தப்புள்ளி அறிக்கை
நாள் 09.01.2024

[illegible] 31.01.2024 [illegible]

1	[illegible]	[illegible] 31.01.2024 [illegible] www.tntenders.gov.in [illegible]
2	[illegible]	31.01.2024 அன்று 3.00 மணிக்குள் www.tntenders.gov.in [illegible]

பணிகள் விவரம்

வ. எண்	பணியின் பெயர்	எண்ணிக்கை	பணியின் மதிப்பீடு தொகை (ரூபாயில்)	காப்புத் தொகை	பணி முடிக்க வேண்டிய கால அளவு
1	UGSS Internal Pumping	1	3,61,00,000	1%	

இடம் திருப்பெரும்புதூர் பேரூராட்சி
நாள்: 09.01.2024
செ.ம.தொ.இ/[illegible]/ஒப்பந்தப்புள்ளி/2024
செயல் அலுவலர், திருப்பெரும்புதூர் பேரூராட்சி

Government of Tamil Nadu
HINDU RELIGIOUS & CHARITABLE ENDOWMENT DEPARTMENT
e-ReTender Notice
FORM OF CONTRACT: LUMPSUMTENDER NOTICE NO.02 / DATED:-09/01/2024.

Executive Officer, Arulmigu Adhikesava perumal Temple, Paramandhur is inviting e-tenders from Registered Sthapathy/ Sculptor in Tamilnadu Government Dept./ Tamilnadu Govt Organisations / in the Approved list of Sthapathy / Sculptor by Commissioner HR&CE Dept. along with live registration through Official Tendering Website (https://tntenders.gov.in) of Tamil Nadu Government
Important details, Tender document and revision if any obtained only from website https://tntenders.gov.in.

Sl No	Name of Work	Approximate Value of Work (Rs.)(including GST 18%)	Amount of EMD in Rupees	Period of Completion	Contractors Qualifications	EMD to be taken in favour of
1	Repair & Renovation Of Five Tier Rajagopuram, Outer Thirumathil and Dhwajastambham of Arulmigu Adhikesavaperumal Temple at Paramandhur, Arandhangi Taluk, Pudukkottai District	1,52,53,100/-	86,500/-	9 months	Registered Sthapathy/ Sculptor in Tamilnadu Government Dept. / Tamilnadu Govt Organisations / in the Approved list of Sthapathy / Sculptor by Commissioner HR&CE Dept., along with live registration	Executive Officer, Arulmigu Adhikesava perumal Temple at Paramandhur, Arandhangi Taluk, Pudukkottai District

1. e – Tender documents can be downloaded - from–12.01.2024 5.00 pm to 28.01.2024 6.00 pm
2. e – Tender documents will be uploaded upto – 30.1.2024 3.00 pm
3. e – Tender Opening date and time –30.01.2024 at 05.30 pm.

Conditions:
1. Tender Documents and Corrected Copies Can be Obtained from https://tntenders.gov.in
2. EMD Amount Remmitted Through Online Only

Executive Officer,
Arulmigu Adhikesavaperumal Temple
Paramandhur, Arandhangi Taluk, Pudukkottai District.

DIPR/181/TENDER/2024